


நாடாளுமன்றத் தேர்தல் குறித்து அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற விருதுநகர் மாவட்டக் கழக நிர்வாகிகளுடனான கலந்துரையாடல் கூட்டத்தில் தேர்தல் ஒருங்கிணைப்பு குழுவைச் சேர்ந்தவரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார். இதில் நாடாளுமன்றத் தேர்தல் ஒருங்கிணைப்புக் குழுவினர் கழக முதன்மைச் செயலாளர் – அமைச்சர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினரான – அமைச்சர் எ.வ.வேலு, அமைச்சர் தங்கம் தென்னரசு மற்றும் மாவட்டக் கழகச் செயலாளர்கள் அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், மு.மணிமாறன் உள்ளிட்ட மாவட்டக் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.




நாடாளுமன்றத் தேர்தல் குறித்து அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற சிவகங்கை மாவட்டக் கழக நிர்வாகிகளுடனான கலந்துரையாடல் கூட்டத்தில் தேர்தல் ஒருங்கிணைப்பு குழுவைச் சேர்ந்தவரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார். இதில் நாடாளுமன்றத் தேர்தல் ஒருங்கிணைப்புக் குழுவினர் கழக முதன்மைச் செயலாளர் – அமைச்சர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினரான – அமைச்சர் எ.வ.வேலு, அமைச்சர் தங்கம் தென்னரசு மற்றும் மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் உள்ளிட்ட மாவட்டக் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### கே.கே.செல்லப்பாண்டியன் தலைமை! கே.எஸ்.ச.இளையசூரியன் வரவேற்புரை!

# புதுக்கோட்டை வடக்கு மாவட்டத்தில் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

## கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் - அமைச்சர் எஸ்.ரகுபதி - கலை கதிரவன் சிறப்புரை!

*புதுக்கோட்டை, ஜன. 30 -*

புதுக்கோட்டையில் வடக்கு மாவட்ட மாணவரணி நடத்தும் மொழிப் போர்த் தியாகிகளுக்கு வீரவணக்கநாள் பொதுக் கூட்டம் 25.01.2024 - வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு திலகர் திடல், புதுக்கோட்டையில், வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் நடைபெற்றது.

வடக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் கே.எஸ்.இளையசூரியன் வரவேற்புரையாற்றினார்.

புதுக்கோட்டை நகரக் கழகச் செயலாளர் ஆ.செந்தில், சிப்காட்நகர் பா.சதீஷ்குமார் செ.பிரசன்னா, ராயல் ஆர்.சபாபதி, கோ.அண்ணாத்துரை ஆகியோர் முன்னிலை வகித்தனர். கழக செய்தி தொடர்பு செயலாளர் பேராசிரியர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், சட்டத்துறை அமைச்சர், புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ரகுபதி, தலைமைக் கழகப் பேச்சாளர் மருத்துவர் கலை கதிரவன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

இதில் டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ., த.சந்திரசேகரன், சுப.சரவணன், செ.அசோக்பாண்டியன், டாக்டர் ரகு அண்ணாமலை, அரு.வீரமணி, க.மதியழகன், பெ.இராஜேஸ்வரி, எம்.லியாக்கத் அலி,

சு.சண்முகம், ஜெயலெட்சுமி தமிழ்செல்வன், கே.எஸ்.சந்திரன், மு.க. ராமகிருஷ்ணன், வெ.முத்துக்கிருஷ்ணன், ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து சி.சண்முகம், இராப்பூசல் எம்.செந்தில்குமார், என்.சாத்தையா இரா.சந்தோஷ், உ.முருகேசன், பி. அண்ணாத்துரை,

எம்.எஸ்.ஏ.முகமது ரிஷா, அ.ரெத்தினம், டாக்டர் மு.க.முத்துக்கருப்பன், சி.அரங்கநாயகம், க.கவிவேந்தன், வே.ராஜேஷ், தவசுமணி, எஸ்.வி.ஆர்.ஜெய் ஸ்டாலின், மு.கலைஞர் கருணாநிதி, மு.இளஞ்சேரன், அன்சாரி பாஷித், ஜெ. அஸ்ரப் அலி, ஆ.ராஜேந்திர சோழன், மழையூர் ராமசாமி, வெற்றிச்செல்வன், டி.அப்புக்காளை, எஸ்.வி.ஆர்.ராஜா, மழையூர் சத்யா, எம்.ஏ.எம். இம்தியாஸ், கி.சுப்பிரமணியன், தட்டாம்பட்டி ஆறுமுகம், காதர் கனி, செ.ரமேஷ், ஏ.எஸ்.கருணாநிதி, உஷாதேவி, க.செ.மணி மாறன், மேல விடுதி ஆறுமுகம், ஏ.எல்.கணேசன், பால்ராஜ். செல்லையா, பிரேம் ஆனந்த, முத்துக்கருப்பன், மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், செயல் வீரர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

முடிவில் மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் தெய்வானை நன்றி கூறினார்.

# முதுகுளத்தூரில் புதிய வழித்தடத்தில் பேருந்து!

## அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் துவக்கி வைத்தார்!

*இராமநாதபுரம், ஜன. 30-*

இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் பேருந்து நிலையத்தில் நேற்று (29.01.2024) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் மூலம் புதிய வழித்தட பேருந்து இயக்கம் துவக்க விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் பா.விஷ்ணு சந்திரன், முன்னிலை வகித்தார். பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் உயர்கல்வித்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், புதிய வழித்தடத்திற்கான புதிய பேருந்தை கொடியசைத்து துவக்கி வைத்து தெரிவிக்கையில்,

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் தேவைகளை அறிந்து திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் பொதுமக்களுக்கு தேவையான திட்டங்கள் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

கமுதி, முதுகுளத்தூர், சாயல்குடி பகுதிகளில் இருந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு சென்று வர ஏதுவாக நேரடி பஸ் வசதி வேண்டி கோரிக்கைகளை முன்வைத்ததன் அடிப்படையில் நேற்று முதல் புதிய பேருந்து கமுதியிலிருந்து, சாயல்குடி வழியாக சிக்கல், தேரிருவேலி, வளநாடு, சத்திரக்குடி, இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வரை நாள்தோறும் நான்கு முறை சென்று வரும் வகையில் புதிய வழித்தடத்தில் இப்பேருந்து இயங்கும். இதன் மூலம் இப்பகுதியில் உள்ள பொதுமக்களுக்கும், அரசு துறையில் பணியாற்றும் பணியாளர்கள் மற்றும் தனியார் நிறுவனங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கு மிக பயனுள்ளதாக இருக்கும். இதுபோல் மக்களின் தேவைக்கேற்ப மற்ற இடங்களிலும் பேருந்து வசதிகள் மேம்படுத்தி தரப்படும் என பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் உயர்கல்வித்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன் , தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக பொது மேலாளர் சிங்காரவேலன், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக கோட்ட மேலாளர்கள் நாகராஜன், பத்மகுமார், மாவட்ட ஊராட்சி குழுத் துணைத்தலைவர் வி.வேலுச்சாமி, முது குளத்தூர் பேரூராட்சி தலைவர் அ.ஷாஜஹான் மற்றும் ஒன்றிய செயலாளர்கள் ஆப்பனூர் ஆறுமுகவேல், பூபதி மணிக சண்முகம், கோவிந்தராஜன் மற்றும் கட்சி நிர்வாகிகள். அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



விருதுநகர் மாவட்டம் காரியாபட்டி, திருச்சுழி மற்றும் நரிக்குடி ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 156 ஏழை எளிய பெண்களுக்கு ரூ .74,44,202 / மதிப்பில் 8 கிராம் தங்க நாணயங்கள் மற்றும் ரூ .55,25,000 / மதிப்பில் திருமண நிதியுதவிகள் என மொத்தம் ரூ .1,29,69,202 / மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை இராமநாதபுரம் பாராளுமன்ற உறுப்பினர் நவாஸ்கனி முன்னிலையில், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு வழங்கினார்.

### பேரறிஞர் அண்ணா 55வது நினைவு நாள் :

# கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன் தலைமையில் பிப்.3 அன்று அமைதிப் பேரணி!

### மாவட்டக் கழகத் தோழர்களுக்கு சென்னை மாவட்டக் கழகச் செயலாளர்கள் வேண்டுகோள்!



காஞ்சி தந்த காவியத் தலைவர் - உலகத் தமிழர் உள்ளங்களில் எல்லாம் சிம்மாசனம் போட்டுக் கொலுவீற்றிருக்கும் செந்தமிழ் அறிஞர் - தமிழ் மொழி உயர்வுக்காகவும், தமிழர்களின் மேம்பாட்டுக்காகவும், தமிழ்நாட்டின் சிறப்புக்காகவும் வாழ்நாள் எல்லாம் ஓயாது பாடுபட்ட உத்தமர் கடமை -, கண்ணியம், கட்டுப்பாடு எனும் தாரக மந்திரத்தை அரசியல் உலகத்திற்கு அறிமுகம் செய்து வைத்த ஆற்றலாளர் - "இப்படை தோற்கின் எப்படை வெல்லும்" என்று தம்பிமார் பெரும்படையைக் கண்டு, நெஞ்சுயர்த்தி பெருமிதம் கொண்ட பெருமகன் - “மெட்ராஸ் ஸ்டேட்” என்ற பெயரை “தமிழ்நாடு” என்று பெயர் மாற்றம் செய்து தாய்க்குப் பெயர் தந்த தனிப் பெரும் தனயன் - சுயமரியாதை சுடரொளி - சொக்க வைக்கும் சொற்பொழிவாளர் - எழுத்து வேந்தர் - தென்னகத்தின் மிகப் பெரும் அரசியல் தலைவர் - பேரறிஞர் அண்ணா அவர்களின் **55வது** நினைவு நாளினையொட்டி, **கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள் தலைமையில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு மற்றும் கழக முன்னணியினர் பிப்ரவரி - 3, சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு காமராஜர் சாலையில் அமைந்துள்ள அண்ணா நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்துவார்கள்.**

இந்த அமைதிப் பேரணி வாலாஜா சாலையில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலை அருகிலிருந்து புறப்பட்டு அண்ணா சதுக்கத்தை சென்றடையும்.

கழக இந்நாள் - முன்னாள் அமைச்சர்கள், இந்நாள் - முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழகச் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், மாநகராட்சி மன்ற முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் இளைஞர் அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, மாணவர் அணி, தொண்டர் அணி, தொழிலாளர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, ஆதிதிராவிடர் நல உரிமைப் பிரிவு, மீனவர் அணி, கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை, இலக்கிய அணி, வழக்கறிஞர் அணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவ அணி, சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல் தொழில் நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, அமைப்பு சாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி ஆகிய அனைத்து அணியினரும் அண்ணன் நினைவு போற்றி அஞ்சலி செலுத்த திரண்டு வாரீர் சென்னை மேற்கு, சென்னை தென்மேற்கு, சென்னை கிழக்கு, சென்னை தெற்கு, சென்னை வடக்கு, சென்னை வடகிழக்கு ஆகிய மாவட்டக் கழகங்களின் சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.

நாள்- 28-1-2024

**சென்னை மாவட்ட தி.மு.க.**




மதுரை மாவட்டம் விரகனூர் வேலம்மாள் பொறியியல் கல்லூரி கூட்டரங்கில் தனியார் பள்ளிகளுக்கு அங்கீகார ஆணைகளை பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி வழங்கிய போது எடுத்தபடம். உடன் பள்ளிக் கல்வித்துறை செயலாளர் குமரகுருபரன், சட்டமன்ற உறுப்பினர்கள் கோ.தளபதி, ஆ.வெங்கடேசன், மு.பூமிநாதன், மாநகராட்சி துணை மேயர் நாகராஜன் ஆகியோர் உடன் உள்ளனர்.